**OS No 1 /2023**

DW 1- வெங்குச்சாமி

நாள் 07.02.2026

**பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம், எதிர்வழக்குரைகான விபரத்தை நான் தான் வழக்கறிஞரிடம் கூறினேன். தாவா சொத்துக்கள் எனது அனைத்தும் எனது தந்தை வழி தாத்தா வெள்ளையக் கோனாருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் 20 வருடங்களுக்கு முன்பு 1ம் வாதி மற்றும் எனது தகப்பனார் அனைவரும் சரிசமமாக பிரித்து அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

தாவா 1ம் இலக்க சொத்து சர்வே எண்.340/13 1ம் வாதி பெயருக்கும், 2ம் இலக்க சொத்து எனது தாத்தாவிற்கும் ஒதுக்கப்பட்டு அவரவர் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்திற்கு செல்ல வேண்டும் என்றால் நான்கு புறமும் வரப்பு உள்ளது. 1ம் இலக்க சொத்திற்கு வருவாய் துறை ஆவணங்களின் படி பாதை இல்லை என்றால் சரிதான்.

வாதி தாவா வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் பாதை கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா 2ம் இலக்க சொத்தில் 2ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருக்கிறார். 2ம் பிரதிவாதியை விசாரணை செய்தால் தாவா சொத்திற்கு உண்மையில் பாதை உள்ளதா என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். எனக்கு பூமிநாதன் என்ற மற்றொரு பெயர் உள்ளது என்றால் சரிதான்.

1ம் வாதி அழகு எனக்கு அய்யா உறவுமுறை வேண்டும். 1ம் வாதி ஏற்கனவே காவல் துறையில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று தேவகோட்டையில் வசித்து வரும் விபரம் எனக்கு தெரியும். அவ்வப்போது திருவிழா சமயங்களில் 1ம் வாதி மற்றும் அவரது குடும்பத்தினர் 1ம் இலக்க

சொத்தில் வந்துசெல்வார்கள் என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கடந்த 29.09.2022ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு எங்களுக்கு அனுப்பினார் என்றால் சரிதான்.

இந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நானும், மற்ற பிரதிவாதிகளும் எந்த பதிலறிப்பும் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா 2ம் இலக்க சொத்திற்கு மானாமதுரை–இராமேஸ்வரம் நான்கு வழிச்சாலைக்காக எனது நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன். எத்தனை செண்ட் என்றால் சுமார் 10 செண்ட் ஆகும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல.

வருவாய்துறை ஆவணங்களில் வெளிப்படையாக பாதை எதுவும் இல்லாத காரணத்தினால் வசதியுரிமை சட்டப்படி நான் பாதை வழங்க கடமைப்பட்டவன் என்று சொன்னால் சரியல்ல. வரப்போ, பாதையோ 1ம் இலக்க சொத்திற்கு இல்லாத காரணத்தினால் வாதி கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல. நான்குபுறமும் வரப்பு உள்ளது, வாதியிடத்திற்கு கீழ்புறம் வாய்க்கால் உள்ளது. வடக்கு பக்கம் 15 மீட்டருக்கு தார் ரோடு உள்ளது. நான் சொல்லியுள்ளதற்கு ஆதாரமாக புகைப்படமோ, நிரூபண வாக்குமூலமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.
–Sd–
District Munsif,
Manamadurai.